**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருப்பூர்.**
**முன்னிலை : திருமதி. A. சுபஸ்ரீ** L.L.M.,
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பூர்.**

**2026−ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02 ஆம் நாள் திங்கள்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீ விசுவாவசு வருடம், தை திங்கள் 19ம் நாள்**

**இ.ம.எண்.821/2023**
**இன்**
**அ.வ.எண்.316/2015**

1. G.சுரேஷ்
2. G.கோபாலகிருஷ்ணன்
3. G.செல்வராஜ் ..மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. G. மோகன்குமார்
2. G. சிவலிங்கம்
3. S. லதா
4. M. சரிதா
5. V. வசந்தி
6. R. கிருஷ்ணவேணி
7. K. லோகேஷ் ( இறப்பு)
8. M. வள்ளியம்மாள்
9. பொன்னம்மாள்
10. ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி அலுவலகம்,
திருப்பூர் ..எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 08.01.2026ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.பக்தபிரகலாதன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 6 மற்றும் 8,9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ஆனந்தன் அவர்கள் முன்னிலையாகியும், 10ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S. கார்த்திக் அவர்கள் முன்னிலையாகியும், 7ம் எதிர்மனுதாரர் இறந்து விட்ட

நிலையிலும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

கடந்த 19.10.2022ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம், கட்டளை 9, விதி 9ன் கீழ் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் :**

**2.1** மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள். எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள்/வாதிகளால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. கடந்த 19.10.2022ம் தேதியன்று இறந்து போன 7ம் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி வாய்தா போடப்பட்டிருந்த போது வாதிகள் ஆஜராகாததால் தள்ளுபடி செய்யப்பட்டது.

**2.2** மனுதாரருக்கு உணவு ஒவ்வாமை காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து வந்ததால் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் கடந்த 19.10.2022ம் தேதியன்று அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. மனுதாரர் வேண்டுமென்றோ அல்லது அஜாக்கிரதையாகவோ அன்றையதினம் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருக்கவில்லை. எனவே, அசல் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 10ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :**

**3.1** மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான ஒன்று அது சட்டப்படியும் பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. கடந்த 19.10.2022ம் தேதியன்று அசல் வழக்கில் மனுதாரகளின் வருகையின்மை

காரணமாக தள்ளுபடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த 08.09.2021ம் தேதியன்று அசல் வழக்கு ஏற்கனவே தள்ளுபடி செய்யப்பட்டு மனுதாரர்கள்/வாதியால் மனு தாக்கல் செய்யப்பட்டதன் தொடர்ச்சியாக அசல் வழக்கு மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டது.

**3.2** அசல் வழக்கை நடத்துவதற்கு மனுதாரர்களுக்கு அக்கரையில்லாததால் மீண்டும் தள்ளுபடிக்கு விட்டுவிட்டார். நீதிமன்ற நேரத்தை வீணாக்கும் வகையில் மனுதாரர்களின் செயல்பாடுகள் உள்ளதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இருதரப்பிலும் வாய்மொழி சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது.

**5.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில்,
"மனுதாரர்கள் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

**6. <u>தீர்வு</u> :–**

**6.1** மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், கடந்த 19.10.2022ம் தேதியன்று 1ம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அசல் வழக்கில் இறந்து போன 7ம் பிரதிவாதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க இயலவில்லை என்றும், எனவே, அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ள தள்ளுபடி உத்தரவு நீக்கறவு செய்து இம்மனுவை அனுமதிக்குமாறு வாதிட்டார்.

**6.2** 10ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், அசல் வழக்கை ஏற்கனவே மனுதாரர் தள்ளுபடிக்கு விட்டுள்ளார் என்றும், அசல் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க வேண்டி இரண்டாவது முறை இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், இறந்து போன 7ம் பிரதிவாதியின் வாரிசுகளை

சேர்ப்பதற்கு மனுதாரர்கள் தரப்பில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், அசல் வழக்கின் தீர்வை காலதாமதப்படுத்தும் நோக்கத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**6.3** இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**6.4** அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.5** அசல் வழக்கில் வழக்கு விசாரணை தொடங்காத காரணத்தால் அசல் வழக்கை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் கடந்த 08.09.2021ம் தேதியன்று உத்தரவு பிறப்பித்துள்ளது. இ.ம.எண்.280/2021ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் அசல் வழக்கு மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 12.08.2021ம் தேதி முதல் 28.09.2022ம் தேதி வரை வழக்கு விசாரணையை தொடங்குவதற்காக பல வாய்தாக்கள் போடப்பட்டும், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கு விசாரணையை தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல், 7ம் பிரதிவாதி இறந்து விட்டதாக 28.09.2022ம் தேதியன்று நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.6** கடந்த 19.10.2022ம் தேதியன்று இறந்து போன 7ம் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தால் அசல் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**6.7** கடந்த 19.10.2022ம் தேதியன்று 1ம் மனுதாரருக்கு ஏற்பட்ட உணவு ஒவ்வாமை காரணத்தால் அன்றையதினம் மனுதாரர்களால் நீதிமன்றத்தில் முன்னிலையாக இயலவில்லை என்று மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள காரணத்தை நிரூபிக்க வேண்டி எவ்வித மருத்துவ ஆவணத்தையும் இம்மனு விசாரணையில் தாக்கல் செய்யவில்லை. மேலும், இவ்வழக்கில் மூன்று மனுதாரர்கள் உள்ள நிலையில், மற்ற மனுதாரர்கள் தரப்பில் இறந்து போன 7ம் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்ப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று மனுதாரர்கள் மனுவில் குறிப்பிடவில்லை.

**6.8** கடந்த 28.09.2022ம் தேதியன்று மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் 7ம் பிரதிவாதி 12.09.2020ம் தேதியன்று இறந்து விட்டதாக குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கை ஏற்கனவே மனுதாரர்கள் தள்ளுபடிக்கு விட்டு விட்டு, இ.ம.எண்.280/2021ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் மீண்டும் கோப்பிற்கு எடுத்துள்ள நிலையில், அதனை விரைந்து நடத்தாமல் வழக்கு விசாரணையை தொடங்குவதற்கு பல வாய்தாக்கள் பெற்றுள்ளார்கள்.

**6.9** மேலும், 2020ம் ஆண்டே இறந்துபோயுள்ள 7ம் பிரதிவாதியின் வாரிசுகளை சேர்ப்பதற்கு உரிய நேரத்தில் தக்க நடவடிக்கை எடுக்காத காரணத்தால், 19.10.2022ம் தேதியன்று மீண்டும் அசல் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/வாதிகளின் மேற்படி செயல்கள் அசல் வழக்கை தொடர்ந்து நடத்துவதற்கு அவர்களுக்கு விருப்பம் இல்லாததையும், நீதிமன்ற நேரம் வீணாவதையும் காட்டுவதாலும், மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள காரணம் நம்பத்தகுந்ததாக இல்லை என்பதாலும், மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்**, மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டு, மேற்படி தேதியன்றே பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.02.02 11:55:39 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்

**இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.02.02 11:55:45 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்